ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1990/15 - 2016 ඔක්තෝබර් මස 26 වැනි බදාදා - 2016.10.26
*1990/15 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண மாகாண சபை

*2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மத்திய மாகாண மாகாண சபையின் பொருட்கள் ஈடுபிடிப்பவர்களின் (திருத்திய) நியதிச் சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண சபையால் 2016, ஓகத்து 23 ஆந் திகதியன்று உறுதி செய்யப்பட்ட 2016, செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதியன்று மாண்புமிகு ஆளுநர் அவர்களால் அங்கீகாரம் செய்யப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட நியதிச் சட்டத்தை எல்லோரும் அறிந்துகொள்வதற்கு இத்தால் பிரசுரிக்கின்றேன்.*

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், நீதி,
சமாதானம், உள்நாட்டு அலுவல்கள் மற்றும்
மாகாண நிர்வாகம், மனிதவலு, கல்வி,
கலாசார நடவடிக்கைகள், சுற்றுலாத்துறை, காணி,
கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தக, வாணிப, உணவு
வழங்கல் மற்றும் விநியோகம், முதலீட்டு
ஒழுங்கமைப்பு அமைச்சரும்,
மத்திய மாகாண மாகாண சபை.

பிரதான அமைச்சர் அலுவலகம்,
மத்திய மாகாண, மாகாண சபை,
கண்டி,
2016, ஒற்றோபர் 17.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, மத்திய மாகாண மாகாண சபையின் பொருள் அடகு பிடிப்போரது (திருத்தப்பட்ட) நியதிச் சட்டம்**

மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, பொருள் அடகு பிடிப்போரது நிதியச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான நியதிச் சட்டம் இதுவாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது :-

1. இந்த நியதிச் சட்டம் மத்திய மாகாண மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, பொருள் அடகு பிடிப்போரது (திருத்தப்பட்ட) நிதியச் சட்டம் என அழைக்கப்படுவதுடன், மத்திய மாகாணத்தின் மாகாண ஆளுநர் அவர்களது அங்கீகாரத்தைப் பெற்ற தினத்திலிருந்து செயற்பாட்டுக்கு வரும்.

பிரிவு 22 ஐ திருத்தியமைத்தல்.

2. முக்கிய நியதிச் சட்டத்தின் 2014 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, அடகு பிடிப்போர் சட்டத்தின் 22 ஆவது பிரிவில் "குறித்த அடகு பிடிக்கப்பட்ட தினத்திலிருந்து எதிர்வரும் 24 மாதங்கள்" என்ற வாக்கியத் தொடர் நீக்கப்பட்டு, "குறித்த அடகு பிடிக்கப்பட்ட தினத்திலிருந்து எதிர்வரும் 12 மாதங்கள்" என்ற சொற்றொடரைப் பதிலீடு செய்வதன் மூலம் இந்தப் பிரிவு திருத்தம் செய்யப்படுகின்றது.

பிரிவு 63 ஐ திருத்தியமைத்தல்.

3. முக்கிய நியதிச் சட்டத்தின் 63 ஆவது பிரிவில் "பதிவு பெற்ற வங்கியொன்று" என்று குறிப்பிடப்பட்ட தொடரின் பொருள் விளக்கத்துக்குப் பதிலாகப் பின்வரும் பொருள் விளக்கத்தைத் தரும் தொடரைப் பதிலீடு செய்வதன் மூலம் குறித்த தொடர் இவ்வாறு திருத்தம் செய்யப்படுகின்றது. பதிவு பெற்ற வங்கி என்பது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பொருளுக்கமைய பதிவு பெற்ற வங்கி எனக் கருதப்படும்.

இரண்டாவது அட்டவணையைத் திருத்தியமைத்தல்.

4. முக்கிய நியதிச் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் அடங்கும் "அந்த அடகுச் சிட்டைக்கு உரிய அடகுப் பொருள், அது அடகு வைக்கப்பட்ட தினத்திலிருந்து 24 மாதங்களுள் மீட்கப்படாது இருப்பின், குறித்த அடகுப் பொருள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட முடியும்" என்ற வாக்கியத் தொடர் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் வாசகங்களைப் பதிலீடு செய்வதன் மூலம் இரண்டாவது அட்டவணை இவ்வாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

"அந்த அடகுச் சிட்டைக்குரிய அடகுப் பொருள், அது அடகு வைக்கப்பட்ட தினத்திலிருந்து 12 மாதங்களுக்குள் மீட்கப்படாது இருப்பின், குறித்த அடகுப் பொருள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்".

5. இந்தச் சட்டத்தின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே ஏதும் பொருள் மயக்கம் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி இருத்தல் வேண்டும்.

11- 532

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.